Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC . No. 328/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | கனகராஜ் | Calling: | விவசாயம் |
| Husband's Name: | கண்ணன் | Religion: | |
| Village: | ராமநாயக்கன்பேட்டை | Age: | 32 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 07.03.2026 நேரம் : 01.28 AM

(எதிரிகள் ஆஜர். )

அ.சா.1 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் நிலப்பிரச்சனை இருந்தது. எனக்கு உடல்நிலை சரியில்லை என்று 3 வருடங்களுக்கு முன்பு மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். போலிசார் அங்கு வந்து என்ன பிரச்சனை என கேட்டு எழுதி கையொப்பம் வாங்கினார். எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் நிகழ்நிலை புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதை தற்போது எதிரிகளுடன் சமாதானமாக போவதற்கு போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். **(சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

கடந்த 16.04.2022ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் என் சொந்த நிலத்தில் இருந்தபோது எதிரிகள் மூவரும் அங்கு வந்து எங்கள் இருவரையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்களா என்றால் இல்லை. 1ம் எதிரி கையால் என்னை முதுகின் மீது அடித்தாரா என்றால் இல்லை. 2ம் எதிரி என்னை கீழே தள்ளி மார்பு மீது மிதித்தாரா என்றால் இல்லை. 3ம் எதிரி கையால் தலை மீது குத்தினாரா என்றால் இல்லை. உயிரோடு விடமாட்டோம் என எதிரிகள் இருவரும் மிரட்டினார்களா என்றால் இல்லை. சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு நான் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு எதிரிகள் எனது ஊர்காரர்கள்ள் என்பதால் தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் சமாதானமாக செல்வதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கனகராஜ்

SRIPATHI K Digitally signed by SRIPATHI K